## சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் ஜீன் மாதம் (30.06.2021) ஆம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

ஆணையாளர் அவர்களின் 05/2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1165,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 05/2021 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1166,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கனரக வாகனம் TN 60 Y 8120–க்குரிய தகுதிச்சான்று 05.08.2021 ஆம் நாளுடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்தினை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்த வேண்டிய கட்டணங்களை அரசுக்கு செலுத்திடவும் மற்றும் வருடாந்திர தகுதிச்சான்று பெற்றிடவும் உண்டாகும் உத்தேச செலவினம் தொகை ரூ1,35,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு. (ந.க.எண்.982/2021/எச்1)

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளளலாம்.

**தீர்மான எண்.1167,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் செயல்முறை கடித எண்.2689/2021/ஜி1 நாள்.08.02.2021ன்படி நடைபெற உள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலில் மாற்றுத்தினாளிகள் சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களுக்கு சக்கரநாற்காலிகள் அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் பேரில் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட ஆர்.ஆர்.ரெமடீஸ், சேலம் என்ற நிறுவனத்தின் மூலம் 14 சக்கர நாற்காலிகள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேன செலவீனம் தொகை ரூ.90,300/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1168,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

சட்டமன்ற பொதுத் தேர்தல், 2021 கூடலூர் நகராட்சி 21 வார்டுகளை கொண்ட 37 சதுர கி.மீ பரப்பளவு சொண்டது 26.02.2021ஆம் தேதி முதல் தேர்தல் விதிமுறைகள் நடைமுறைக்கு வரப்பெற்றுள்ளது. இந்நிலையில் தேர்தல் ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரின் அறிவுரைகளின்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்சி பேணர்கள், சுவரொட்டிகள், கொடிக்கம்பங்கள், வாசகங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்படி பணிக்கு தேவையான பிரஸ், சுண்ணாம்பு, பணியாளர்களுக்கான கூலி வழங்கிட ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.1,00,000/–க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1169,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.6

இந்நகராட்சி அலுவலக உபயோகத்தில் இருந்து வரும் பொளிரோ ஈப்பு வாகனம் எண் TN-60 R-6378 ற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் சஸ்பென்சன் பழுதுகள்,இதர பழுதுகள் நீக்கம் செய்ய 21.06.2021 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 24.06.2021 அன்று வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும்.

| வ.எண் | பெயர்(ம)முகவரி | தொகை(ரூ.) |
|---|---|---|
| 1. | அகரம் மோட்டார்ஸ் - கம்பம் | ரூ.30,419/– |
| 2. | MSA மோட்டார்ஸ் -கம்பம் | ரூ.32,800/- |
| 3. | நவின் ஆட்டோ ஒர்க்ஸ் - கம்பம் | ரூ.35,970/- |

<u>அலுவலக குறிப்பு</u>:-

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அகரம் மோட்டார்ஸ் - கம்பம் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.1170,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.7

இந்நகராட்சி அலுவலக உபயோகத்தில் இருந்து வரும் பொளிரோ ஈப்பு வாகனம் எண் TN-60 Y-7332 ற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் ரோட்டர்,பேடு,மற்றும் சிறு பழுதுகள், நீக்கம் செய்ய 02.06.2021 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 07.06.2021 அன்று வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் மன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும்.

| வ.எண் | பெயர்(ம)முகவரி | தொகை(ரூ.) |
|---|---|---|
| 1. | ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் - கம்பம் | ரூ.19,655/– |
| 2. | லட்சுமி ஆட்டோ கேரேஜ் -கம்பம் | ரூ.20,545/- |
| 3. | லட்சுமி இன்ஜினியரிங் லேத் -கம்பம் | ரூ.23,110/- |

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ முருகன் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் ,கம்பம் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை செய்ததை அதற்கான பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1171,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.8

கூடலூர் நகராட்சியில் 2015-16 மற்றும் 2017-18 நிதி ஆண்டுகளில் ஒப்பந்ததாரர் திரு.டி.சரவணக்குமார் அவர்கள் திட்ட நிதிகளின் கீழ் செய்து முடித்த பணிகளுக்கு பட்டியல் பெறும் போது பட்டியலில் பிடித்தம் செய்த (FSD) தொகையினை திரும்ப பெற கீழ்கண்டவாறு உள்ளவற்றை வழங்குமாறு 14.06.2021 ஆம் நாளன்று விண்ணப்பம் கொடுத்துள்ளார்.

| **வ.எண்** | **நிதியாண்டு** | **தொகை(ரூ.)** |
|---|---|---|
| **1.** | **2015-16** | **4,000/-** |
| **2.** | **2016-17** | **20,584/-** |
| **3.** | **2017-18** | **1,48,683/-** |
| | **மொத்தம்** | **1,73,267/-** |

மேற்படி தொகையானது காலங்கடந்த வைப்புத்தொகை ஆகும் மேற்படி பதிவுகள் இந்நகராட்சி காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு 2021–2022ல் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலே கண்ட பணிகளின் மீது தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லை எனவே மேற்படி பட்டியலில் பிடித்தம் செய்த (FSD) தொகை ரூ.1,73,267/-ஐ ஒப்பந்ததாரர் திரு.டி.சரவணக்குமார் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1172,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறை,மேலாளர் அறை மற்றும் கணிணி அறையில் உள்ள அலுமினிய கண்ணாடி கதவுகளை சரி செய்தல் மற்றும் ஆணையாளர் அறை, கணிணி அறை ஆகியவற்றில் உள்ள குளிர்சாதன இயந்திரங்களில் (AC.Unit) பராமரிப்பு பணிகள் செய்வதற்கு 11.06.2021ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்காக.

| | பணியின் பெயர் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அறை,மேலாளர் அறை மற்றும் கணிணி அறையில் உள்ள அலுமினிய கண்ணாடி கதவுகளை சரி செய்தல் மற்றும் ஆணையாளர் அறை, கணிணி அறை ஆகியவற்றில் உள்ள குளிர்சாதன இயந்திரங்களில் (AC.Unit) பராமரிப்பு பணிகள் செய்திடல் | திரு.டி.சித்திரேசன் | ரூ.9,750/- |
| | | திரு.கே.சேகர் | ரூ.10,000/- |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான **தொகை ரூ.9,750/-** கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.டி.சித்திரேசன் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1173, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.10**

கூடலூர் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் தினசரி சேகரமாகும் குப்பைகளை **JCP** மூலம் அப்புறப்படுத்த நகர்மன்ற தீர்மான எண் 1099, நாள். 29.01.2021 இல் அனுமதிக்கப்பட்டதின் படி மேற்படி பணியினை மேற்கொள்ள **26.02.2021** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1221/2019/எச்1)

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் | நிறுவனத்தாரின் பெயர் | விலைவிகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட கூடுதல் | மதிப்பீட்டை விட குறைவு. |
| 1 | கூடலூர் நகராட்சி பெத்துக்குளத்தில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை **JCP** மூலம் அப்புறப்படுத்தல். | 2.50 | திரு.அ.தெய்வேந்திரன்,கூடலூர் | 2.94 | – |
| | | | திரு.P.முருகன், கூடலூர் | – | மதிப்பீட்டு விலை விதிதம். |

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.பி.முருகன், கூடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1174, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.11**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் இலகரக வாகனம் (LCV) TATA ACE வாகன எண்கள். TN 60 AY 4473 மற்றும் TN 60 AY 4486 க்கு புதிய பேட்டரிகள் வாங்கி பொருத்துவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.10,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1175,அனுமதிக்கப்பட்டது**